1975 மார்ச் 5]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்கள்.

THIRU K. M. SUBRAMANIAM : I got the answer, Sir.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, கொத்தவால் சாவடி வாணிகச் சந்தையில் தற்பொழுது எப்பொழுது பார்த்தாலும் சுத்தமில்லாமல் இருக்கிறது. இதைத் தூய்மைப்படுத்த அரசாங்கம் ஏதாவது முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவரவர்களே, தூய்மை படுத்தப்பட்டுத்தான் வருகிறது. தினம் தினம் கூட்டம் அதிகமாக வருவதால் மாலையிலே தூய்மைப்படுத்தினால் மறுநாள் காலையில் தூய்மை குலைந்து விடுகிறது. இப்படிப்பட்ட கூட்டங்கள் நிரந்தரமாக வரும் பகுதிகளில் தூய்மையைப் பார்க்க முடியாது.

Houses allotted to Industrial workers

*193 Q.—THIRUMATHI T. N. ANANDANAYAKI : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) whether the industrial workers to whom houses have been allotted on rental basis in the Thiru-vi-ka Nagar and in the V.O.C. Nagar, Vyasarpadi, Madras have requested for allotting the respective houses on hire purchase scheme; and

(b) if so, the action taken thereon?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) & (இ) 1971 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திலும், 1974 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்திலும் திரு. வி. க. நகரில் இருக்கும் தொழிற்சாலை பணியாளர்கள் குடியிருப்புகளை தவணை முறையில் வாங்குதல் அடிப்படையில் (Hire Purchase Basis) தங்களுக்கு ஒதுக்கீடு செய்யக்கேட்டுக்கொண்டார்கள். அவர்களது கோரிக்கைகள் பரிசீலிக்கப்பட்டு நிராகரிக்கப்பட்டது. வ.உ.சி. நகரில் இருக்கும் குடியிருப்பு, குடிசைப்பகுதி முன்னேற்ற திட்டத்தின்கீழ் கட்டப்பட்டது. அந் நகரில் உள்ள எந்த ஒரு தொழிற்சாலை பணியாளரிடமிருந்தும் குடியிருப்புகளை தவணை முறையில் வாங்குதல் அடிப்படையில் ஒதுக்கீடு செய்ய இந்நாள் வரை கோரிக்கை பெறப் படவில்லை.

THIRU K. M. SUBRAMANIAM : Was the request rejected because the factory owners or the mill owners contributed to the construction of these houses? Did they contribute anything?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, தொழிற்சாலையின் பங்கு அந்த வீடு கட்டுவதில் இருக்கிறது. அதுமட்டும் அல்லாமல், இந்த வீடுகள் எந்தெந்தத் தொழிற்சாலைகளிலே பணியாற்றுகிறார்களோ அந்தத் தொழிலாளர்களுக்காகக் கட்டப்படும் வீடுகள். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், திரு. வி. க. நகரில் பக்கிங்காம் ஆலைத் தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள், அதற்காக பக்கத்தில் குடியிருப்பு இருக்கிறது. நாளைக்கு அந்தத் தொழிலாளர்கள் அந்தத் தொழிற்சாலையை விட்டுப் போய்விட்டால் அதற்குப் பிறகு வரும் தொழிலாளர்கள் அங்கே வாழ வேண்டுமென்பதற்காக அந்தக் குடியிருப்புகள் நிரந்தரமாக விற்கப்படுவதில்லை. இப்படிப்பட்ட குடியிருப்புகள் விற்கப்படக் கூடாது என்ற முடிவு சென்னையிலே கூடிய வீட்டு வசதி அமைச்சர்கள் மாநாட்டில் எடுக்கப்பட்டிருக்கிறது.

Houses constructed in Mambalam Tank Bund area

* 194 *Q.*—THIRU K. M. SUBRAMANIAM: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether the flats constructed under the Hire Purchase Scheme at Mambalam Tank Bund in Division No. 109 in Madras City have not been allotted to the slum dwellers in the area; and

(*b*) if so, the reasons therefor?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, (அ) & (இ) மாம்பலம் ஏரிக்கரைப் பகுதியில் மட்டுமல்ல, எல்லாக் குடிசை வாரியத் திட்டங்களிலும் தவணை முறையில் குடிசைவாழ் மக்களுக்கு வீடுகளை ஒதுக்க வேண்டும் என்பதுதான் அரசின் நோக்கம். அந்தப் பகுதி வாழ் மக்கள் தவணை முறைக்கு முன்வராவிடில் குடிசை வாரிய விதிகளுக்குட்பட்ட மற்ற ஏழை மக்களுக்கும் இந்தச் சலுகை நீட்டிக்கப்படும். மாம்பலம் ஏரிக்கரைப் பகுதி திட்டம் குடிசை மாற்று வாரியம் துவக்கிய முதல் திட்டமாகும். அண்ணா சாலையை ஒட்டியுள்ள முன்வரிசைப் பகுதியில் 128 குடியிருப்புகள் தவணை முறைக்கும், வாடகைக்கு என்று உள்ளே 392 குடியிருப்புகளும் கட்டப்பட்டன. ஆரம்பகாலத் திட்டமாதலால் தவணை முறையில் நன்மையை உணராததால் அந்தப் பகுதிவாழ் மக்கள் வாடகைக் குடியிருப்புகளையே நாடினர். அதனால் மேற்கண்ட 128 குடியிருப்புகளும் தவணைமுறைக்கு விரும்பிய இயலாதோருக்கு அளிக்கப்பட்டன.